

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்க அலுவலகத்தில், மாலத்தீவில் 2.12.2025 முதல் 6.12.2025 வரை நடைபெற்ற 7 வது உலக கோப்பை கேரம் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனையான செல்வி மித்ராவிற்கு உயரிய ஊக்கத்தொகையாக 40.00 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி, பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உடனிருந்தனர்.

## மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தை

# சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப் பதிவில் கண்டனம்!

சென்னை, டிச.16–

மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சிதைத்து சின்னா பின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:-

**மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்டத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

**தேசத்தந்தை காந்தியடிகளின் மீதுள்ள வன்மத்தால் அவர் பெயரைத் தூக்கிவிட்டு, வாயில் நுழையாத வடமொழிப் பெயரைத் திணித்திருக்கிறார்கள்!**

**100% ஒன்றிய அரசின் நிதியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்துக்கு இனி 60% மட்டுமே நிதி ஒதுக்குவார்களாம்!**

**இவை அனைத்துக்கும் மேலாக, நாட்டிலேயே வறுமையை முழுமையாக ஒழித்துச் சாதனை படைத்துள்ளதற்காகவே நம் தமிழ்நாடு தண்டிக்கப்படவுள்ளது! வறுமை இல்லாத மாநிலம் என்பதற்காக, இருப்பதிலேயே குறைவாகத்தான் இத்திட்டத்தின் பயன்கள் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்குமாம்!**

**பல கோடிப் பேரை வறுமையின் பிடியில் இருந்து மீட்டு, மாண்புடன் வாழ வழிவகுத்த ஒரு திட்டத்தை ஆணவத்துடன் அழிக்கப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

**#ThreeFarmLaws, #CasteCensus போன்றவற்றில் எப்படி பின்வாங்கினீர்களோ, அதேபோல #MGNREGAவைச் சிதைக்கும் முயற்சியிலும் மக்கள் உங்களை நிச்சயம் பின்வாங்க வைப்பார்கள்! எனவே, மக்களின் சீற்றத்துக்கு ஆளாகாமல் இப்போதே #VBGRAMG திட்டத்தைக் கைவிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞர்கள், தங்கள் பங்களிப்பை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும்!

## விருது வழங்கும் விழாவில் முதல்வர் உரை..... முதல் பக்கத் தொடர்ச்சி

எங்கள் தொலைக்காட்சித் தொடரில் நடிக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் அழைப்பு விடுத்தபோது, பொதுவாக, சினிமாவில் பிசியாக இருக்கும்போது, டிவி சீரியலில் நடிக்க விரும்ப மாட்டார்கள்; வர மாட்டார்கள். ஆனால், துணிச்சலாக வந்து தொலைக்காட்சித் தொடரிலும் நடித்தவர்தான் நம்முடைய நாசர் அவர்கள். அதேபோல, கலைஞரின் கதை வசனத்தில் இளைஞன், பாசப்பறவைகள், பொன்னர் சங்கர் என்று பல படங்களில் நடித்த அவர் இன்று கலைஞர் விருதைப் பெறுவது மிகமிகப் பொருத்தம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தகுதி உண்டா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்; நிச்சயமாக சொல்கிறேன்; உங்களுக்கு அனைத்துத் தகுதிகளும் உண்டு என்பதை நான் அழுத்தந்திருத்தமாக சொல்கிறேன்.

### ராஜரத்னா ‘விருது’!

அதேபோல, ‘ராஜரத்னா’ விருதை வடுவூர் எஸ்.என்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெற்றிருக்கிறார். 60 ஆண்டுகளாக, 10 ஆயிரம் மேடைகளில் பங்கெடுத்த கலைமாமணி இவர். இங்கு மட்டுமல்ல, பல உலக நாடுகளிலும் இவரின் இசை ஒலித்து கொண்டு இருக்கிறது.

### நாநயமும் நகைச்சுவை உணர்வும் கலந்து – நல்ல தமிழ்ப் பேச்சாளர்!

அதேபோல, இயல்செல்வம் விருது பெறும் திருவாரூர் புலவர் சண்முகவடிவேலன் அவர்களை இந்த அரங்கிற்கு நான் அறிமுகம் செய்யத் தேவையில்லை.

யூடியுப்பைத் திறந்தாலே அவரை பார்க்காமல் இருக்க முடியாது; நான் கூட இரவில் தூங்கும் பொழுது, அவருடைய பட்டிமன்றத்தை கேட்டுவிட்டு, அவருடைய நகைச்சுவை, கருத்துக்களை கேட்டு விட்டு தான் சில நேரங்களில் தூங்குவது உண்டு. 36 ஆண்டுகள் திருவாரூரில் பள்ளி ஆசிரியராக இருந்தவர் இன்றைக்கு அந்த விருதை பெற்றிருக்கிறார். அவரின் பேச்சுப் பாடத்தை உலகமே கேட்டுக்கொண்டிருக்கிறது. நாநயமும், நகைச்சுவையும் கலந்த நல்ல தமிழ்ப் பேச்சாளர். நாடு முழுவதும் தமிழ் மேடைகளில் வலம் வந்து கொண்டிருக்கக் கூடியவர். அவர் இந்த பெறுவதை உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று.

### ‘இசைச் செல்வம்’ – ‘நாட்டியச் செல்வம்’ விருதுகள்!

இசைச் செல்வம் விருதை காயத்திரி வேங்கடராகவன் அவர்கள் பெற்றிருக்கிறார். தனது குரலால் அனைவர் மனதையும் ஈர்க்கும் இசைக் கலைஞராக இசையுலகத்தில் தனக்கென தனியிடம் பிடித்திருப்பவர் காயத்திரி வேங்கடராகவன் அவர்கள் இந்த விருதை பெற்றிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரியது.

‘நாட்டியச் செல்வம்’ விருதை அனிதாகுஹா பெற்றிருக்கிறார். சென்னையில் இருக்கும் மிகப் பிரபலமான பரதநாட்டிய ஆசிரியர்களில் ஒருவராக இருக்கக்கூடியவர். இளம் பருவத்தில் இருந்தே ஆடற்கலையில் தேர்ந்த இவர், நடன நாட்டியங்களின் மூலமாக புகழ்பெற்றிருக்கிறார். ராதா, ராவணன், வள்ளி போன்ற வேடங்களின் மூலமாக பலரின் மனதிலும் இடம்பிடித்தவர்.

### திருமெய்ஞானம் சகோதரர்களுக்கு ‘நாதஸ்வரச் செல்வம்’!

‘நாதஸ்வரச் செல்வம்’ விருதை திருமெய்ஞானம் சகோதரர்களான ஐயப்பன், மீனாட்சி சுந்தரம் ஆகியோர் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் குடும்பமே ஒரு இசைக்குடும்பம். தந்தையார் டி.கே.ராமசாமி மிகப்பெரிய நாதஸ்வர மேதை. குருவை மிஞ்சிய சிஷ்யர்களாகவும் இருக்கிறார்கள். தங்களைப் போலவே மேலும் பல திறமைசாலிகளை உருவாக்கியும் வருகிறார்கள்.

### ‘தவில் செல்வம்’ விருது!

‘தவில் செல்வம்’ விருதை நாங்கூர் என்.கே.செல்வகணபதி அவர்கள் பெற்றிருக்கிறார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இசை கற்று, அங்கேயே 22 ஆண்டுகளாக தவில் பேராசிரியராக இயங்கி வரும் சிறப்புக்குரியவர் செல்வகணபதி அவர்கள். உலகக் கோயில்கள் எல்லாவற்றிற்கும் சென்று தன்னுடைய தவில் கலையை பதிவு செய்து வருகிறார்.

### ‘மிருதங்கச் செல்வம்’ விருது!

‘மிருதங்கச் செல்வம்’ விருதை தஞ்சாவூர் கே.முருகபூபதி அவர்கள் பெற்றிருக்கிறார். பல தலைமுறைகளாக இசைத் தொண்டாற்றும் குடும்பத்தைச் சேர்ந்தவர் இவர். உலகப் புகழ்பெற்ற மிருதங்கக் கலைஞர்! வட இந்திய இசை மேடைகளிலும் நுழைந்து கலக்கிக்கொண்டு இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். இவர் பெறாத விருதுகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு விருதுகளை பெற்று குவித்திருக்கிறார். ஒட்டுமொத்தமாக, விருது பெற்றிருக்கக்கூடிய அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

நீங்கள் எத்தனையோ விருதுகளை, பட்டங்களைப் பெற்றிருக்கலாம். இனியும் பெறலாம். ஆனால், முத்தமிழ்ப் பேரவை வழங்கக்கூடிய பட்டம் என்பது மிக மிகச் சிறப்பானது. காரணம், இந்தப் பேரவையை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்.

### உங்கள் கலைத் தொண்டு தொடர வேண்டும்!

அரை நூற்றாண்டு காலமாக இயங்கும் ஒரு அமைப்பு தரும் பட்டங்கள் இவை! பெரிய பெரிய ஜாம்பவான்கள் பெற்ற பட்டங்கள் இவை! இனியும் உங்கள் கலைத் தொண்டு தொடர வேண்டும் என்று அதற்காகத் தான் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

முந்தைய ஆட்சிக் காலத்தில், பத்து ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த திரைப்பட விருதுகளையும், சின்னத்திரை விருதுகளையும், நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, 2022–ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில்தான் தரப்பட்டது. அதிலிருந்து, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த சின்னத்திரைக் கலைஞர்களுக்கான விருதையும் நிறுத்தி வைத்திருந்தார்கள். 2022–ஆம் ஆண்டுதான் 15 ஆண்டுகளுக்கான விருதுகளை மொத்தமாக வழங்கியிருக்கிறோம். இந்த ஆண்டுக்கான விழா இன்னும் சில நாட்களில் நடைபெற இருக்கிறது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகளும் விரைவில் வழங்கப்பட இருக்கிறது.

### ‘கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர்’ விருது!

கதை, வசனகர்த்தா ஆரூர்தாஸ், கவிஞர் மு.மேத்தா, பாடகி பி.சுசீலா ஆகியோருக்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது எனும் வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கியிருக்கிறோம்.

டி.எம்.சௌந்தரராஜன் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடி இருக்கிறோம். ‘பாடும் நிலா’ எஸ்.பி.பி, சின்ன கலைவாணர் நடிகர் விவேக், ஜெய்சங்கர் ஆகியோர் நினைவாக தெருக்களுக்கு பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறோம்.

### இசைஞானி இளைய ராஜாவுக்கு உலகமே வியக்கும் வகையில் பாராட்டுவிழா!

சிம்பொனி தமிழர் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு உலகமே வியக்கக்கூடிய வகையில் பாராட்டு விழா அரசின் சார்பில் நடத்தியிருக்கிறோம். கலைமாமணி விருதுகள் சரியாக தகுதியான நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளுக்கு ஏராளமான விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

### நடிகர் சிவக்குமாருக்கு மதிப்புறு முனைவர் பட்டம்!

அதுமட்டுமல்ல, நம்முடைய ஆட்சியில், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் மிக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அண்மையில் கூட பட்டமளிப்பு விழா நடைபெற்றது. நடிப்பிலும், பேச்சிலும் சிறந்த மார்கண்டேயராக விளங்கக்கூடிய சிவக்குமார் அவர்களுக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. சங்கமம் கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கிறது.

இப்படி, திரைக் கலைஞர்கள், சின்னத்திரைக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், இலக்கியவாதிகள் என்று கலைஞர்களை போற்றும் அரசாக திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. எதிர்காலத் தலைமுறையை பண்பாடு கொண்ட தலைமுறையாக வளர்க்க கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற துறைகள்தான் மிகமிக முக்கியம்! கலைஞர்களாகிய நீங்கள், உங்கள் பங்களிப்பை நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்று கேட்டு, விருது பெற்றிருக்கக்கூடிய அனைவரையும் மீண்டும் ஒரு முறை மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கம் வென்ற

# தமிழ்நாட்டு வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.16–**

**மாலத்தீவில் நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2025) தலைமைச் செயலகத்தில், மாலத்தீவில் நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

மேலும், சென்னையில் நடைபெற்ற SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றதோடு, டெல்லியில் நடைபெற்ற 3வது CII Sports Business Awards 2025 விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான விருதினையும் காண்பித்து, வாழ்த்து பெற்றனர்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

**7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை**

மாலத்தீவில் 2.12.2025 முதல் 6.12.2025 வரை நடைபெற்ற 7வது கேரம் உலகக் கோப்பை போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி கீர்த்தனா, செல்வி காசிமா, செல்வி மித்ரா ஆகியோர் பதக்கங்கள் வென்றனர். செல்வி கீர்த்தனா அவர்களுக்கு 1 கோடி ரூபாயும், செல்வி காசிமா அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயும், செல்வி மித்ரா அவர்களுக்கு 40 இலட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் வழங்குவதாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, செல்வி கீர்த்தனா மற்றும் செல்வி காசிமா ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் வழங்கி, வாழ்த்தி அடுத்தடுத்து வரும் போட்டிகளில் வெற்றி பெற்று நாட்டிற்கு மென்மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்கள் சந்தித்து வாழ்த்து**

இந்தியன் ஸ்குவாஷ் அகாடமியின் சார்பில் 9.12.2025 முதல் 14.12.2025 வரை சென்னையில் நடைபெற்ற SDAT ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணியைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் ஜோஷ்னா சின்னப்பா, அபே சிங், அனஹத் சிங், வேலவன் செந்தில்குமார், ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் இயக்குநர் சைரஸ் போன்சா மற்றும் பயிற்றுநர்கள் ஹரிந்தர் பால் சிங், ஆலன் சோய்சா ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து, வாழ்த்து பெற்றனர்.

**விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான விருதினைக் காண்பித்து வாழ்த்து**

டெல்லியில் 9.12.2025 அன்று நடைபெற்ற 3வது CII Sports Business Awards 2025இல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்பட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான (THE BEST STATE PROMOTING SPORTS DEVELOPMENT AWARD) விருதினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து, வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு வீரர்களின் பெற்றோர்கள் மற்றும் பயிற்சியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆலந்தூரில் புதிய ஹஜ் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டிட — இன்று வருகை தரும்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினருக்கு — அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

*சென்னை, டிச.16-*

*ஆலந்தூரில் ரூ.29 கோடி செலவில் அமைய உள்ள புதிய ஹஜ் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டிட இன்று வருகை தரும் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திரண்டு வந்து ஜி.எஸ்.டி சாலையில் ஆலந்தூர் தபால் நிலையம் முதல் நங்கநல்லூர் மெட்ரோ ரயில் நிலையம் வரை சாலையின் இடதுபுறம் திரண்டு நின்று இன்று காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-*

*ஆலந்தூர் தொகுதி நங்கநல்லூர் மெட்ரோ இரயில் நிலையம் அருகில் ரூ.29 கோடி செலவில் புதிய ஹஜ் இல்லம் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்படவுள்ளது.*

*இப்புதிய ஹஜ் இல்லத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று 16-ஆம் தேதி காலை 10.00 மணி அளவில் நடைபெவுள்ளது. கழகத் தலைவர் - முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் வருகை இப்புதிய ஹஜ் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.*



*இவ்விழாவிற்கு இன்று காலை வருகைத் தரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் ஜி. எஸ்.டி சாலையில் ஆலந்தூர் தபால்நிலையம் முதல் நங்கநல்லூர் மெட்ரோ ரயில் நிலையம் வரை சாலையின் இடதுபுறம் திரண்டு நின்று மேள-தாளம், பேண்டு-வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் காலை 9.00 மணிக்கெல்லாம் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*

# ஒய்வூதிய சீர்திருத்தங்களின் காலக்கெடுவில் குழப்பம்!


## மக்களவையில் — டி.எம்.கதிர்ஆனந்த் ஒத்திவைப்பு தீர்மானம்!

*புதுடெல்லி, டிச. 16-*

*நாடாளுமன்ற மக்களவையில் மிகவும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திட்டவட்டமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்காக, சபை அவை நடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கான தீர்மானத்தை வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் தாக்கல் செய்த தன் விபரம் வருமாறு:*

*வேலையின்மை, மருத்துவ அவசரநிலைகள் மற்றும் பொருளாதார அழுத்தத்தின் போது அத்தியாவசிய நிதி நிவாரணம் போன்ற EPF திரும்பப் பெறுதல் மற்றும் முன்பணக் கோரிக்கைகள் ஆதார் UAN பொருந்தாத தன்மை, பணியாளர் சரிபார்ப்பு குறைபாடுகள், CPCS இடர்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான EPFO போர்டல் செயலிழப்புகள் காரணமாக சட்டப்பூர்வ 20 நாள் காலக்கெடுவைத் தாண்டி தாமதமாகி வருவது வருத்தமளிக்கிறது.*

*ஒன்றிய அரசின் சமீபத்திய முடிவு, முழு EPF திரும்பப் பெறுதலுக்கான வேலையின்மை காத்திருப்பு காலத்தை 2 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகவும், EPS திரும்பப் பெறுதலை 2 மாதங்களிலிருந்து 36 மாதங்களாகவும் உயர்த்தியதால், அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் பணவீக்கம் காரணமாக லட்சக் கணக்கான வேலை தேடும் குடும்பங்கள் தங்கள் சொந்த சேமிப்புகளை அணுகி பெற முடியாமல் தவிக்கின்றன.*




*இது கோடிக்கணக்கான EPF சந்தாதாரர்கள் வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது, அவர்கள் போர்டல் செயலிழப்புகள், காலாவதியான பாஸ்புக்குகள், KYC பிழைகள் மற்றும் 2025-26 நிதியாண்டிற்கான EPF வட்டி விகிதம் அல்லது 15,000 ஊதிய உச்சவரம்பை நீக்குதல் போன்ற EPS ஒய்வூதிய சீர்திருத்தங்களுக்கான காலக்கெடு குறித்து தெளிவின்மை ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர்.*

*எனவே, தேசிய அளவில் மிகவும் கவலைக்குரிய இந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு கதிர் ஆனந்த் மக்களவையில் சபை ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.*

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 20.12.2025 - சனிக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில், மதுராந்தகம், ஹோட்டல் ஹைவே கூட்ட அரங்கில், மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஓ.எஸ். தினகரன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி குமார், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:–

1) வரைவு வாக்காளர் பட்டியல் கழக நிர்வாகிகளிடம் வழங்குவது சம்பந்தமாக,

2) கழக ஆக்கப்பணிகள்

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் – மாவட்ட செயலாளர் பி.கே.சேகர் பாபு தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் கழக துணை பொது செயலாளர் ஆ.இராசா எம்.பி. ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் தொகுதி பார்வையாளர்கள் இரா. விடுதலை, இரா.நரேந்திரன், ஓ.ஏ.நாகலிங்கம் என்.கிருஷ்ணமூர்த்தி, சன், முனியாண்டி, பி.எம்.யாழினி, பகுதிக் கழகச் செயலாளர்கள் வ.முரளிதரன், எ.நாகராஜன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சொ.வேலு, வி.சுதாகர், எஸ். ராஜசேகர், எஸ்.முரளி, வே.வாசு, கூ.பீ.ஜெயின், டி.எஸ்.பி.ராஜகோபால்.எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 1,5,8,11, 14, 15, 16, 17, ஆகிய வார்டுகளில் ரூபாய் 2 கோடி 28 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகளை சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார். உடன் திருவேற்காடு நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, நகராட்சி ஆணையர் ராமன், மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் வார்டு செயலாளர்கள் நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.